Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 9 2 66 இதழ் 1

[illegible] தை 27 ஷவ்வால் [illegible] 17 புதன்கிழமை

## செயல் திறமையுடைய ஆசிரியர்களுக்கே சர்பள உயர்வு!

பம்பலப்பிட்டி, செவ்

ஆசிரியர்களே உஷார்! இனிமேல் உங்களுக்கு சம்பளவு உயர்வு உங்கள் வேலையை பொறுத்தே வழக்கப் படவிருக்கிறது!

இப்பொழுது தங்கள் கடமையை கண்ணியத்துடனும், கடமையுணர்ச்சியுடனும் செய்யாத எல்லா ஆசிரியர்களுக்குமே சம்பள உயர்வு வழங்கப்படுகிறதல்லவா? அந்தமுறை விரைவில் மாற்றி அமைக்கப்படவிருப்பதாக கல்வி இலாகா வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஆசிரியர் ளில் பலர் கண்டமாதிரி லீவு எடுத்தும், நேரம் பிந்திச் சென்றும், தங்கள் கடமைகளை உரிய முறையில் செய்யாது தட்டிக்கழித்து வருவது பற்றியும் கல்வி இலாகாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து தங்கள் கடமைகளைச் சரிவரச்செய்யும் ஆசிரியர்களுக்கு மட்டுமே சம்பள உயர்வு வழங்கப்படவிருக்கிறது.

பாடசாலைகளின் பரீட்சை முறையில் மாறுதல் செய்து, அதாவது தவணைப் பரீட்சைகளை மாற்றப் பாடசாலை (6-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப்பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

## மே மாதத்தில் வழங்கப்படும்

வெள்ளவத்தை, செவ்

தமிழ்ப் பட்டதாரிகளுக்கு எதிர்வரும் மே மாதம் ஆசிரிய நியமனம் வழங்கப்படும்.

நான்கு ஐந்து வருடங்களாக வேலையின்றித் தவிக்கும் தமிழ்ப் பட்டதாரிகளின் நிலைமை குறித்து பலதடவைகள் கல்வி அமைச்சரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்தபின் வேலையற்ற பட்டதாரிகள் இதுபற்றிய முறைப்பாட்டினைக் கொண்டதொரு மகஜரைக் கல்வி மந்திரியிடம் சமர்ப்பித்திருந்தனர்.

இதுபற்றிய முறைப்பாடு தமிழ்க்காங்கிரஸ், தமிழரசுக் கட்சி தலைமைப் பீடங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது இவர்கள் கல்விமந்திரியிடம் இதுபற்றி நடாத்திய பல பேச்சுவார்த்தைகளின் பயனாக பள்ளிக்கூடங்களின் இரண்டாம் தவணை மே மாதம் ஆரம்பமாகும் போது இவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் கடந்த தேர்தல்காலத்தில் இதற்கான விண்ணப்பங்களைக் கோரியிருந்தாலும் புதிதாக விண்ணப்பங்கள் கோரப்படுமெனத்தெரிகிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாவட்டத்தில் கணக்கு காட்டாத பலர்

### பிப். 17-ந் திகதி இறுதி தவணை

யாழ்ப்பாணம், புதன்

1965-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் திகதி தொடங்கி வருகிற 17-ம் திகதி முடிவடையும் வரி மன்னிப்பை, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வரியிறுப்போர் போதிய அளவு பயன்படுத்திக் கொள்ளவில்லை என அரசாங்க மாவட்ட அறிவிப்பு கூறுகிறது.

பதுக்கல் பணம், கணக்கில் காட்டாத சாமான்கள், வருமதிகள் ஆகிய உண்மைகளை யாழ். மாவட்டத்திலுள்ள பலர் தெரிவித்துள்ள போதிலும், இன்னும் காட்டாத பலரும் இருக்கிறார்கள். எனினும், யாழ்ப்பாண மாவட்ட வருமானவரிப் பிரிவில் இவர்களைப்பற்றி போதிய தகவல்கள் இருப்பதாயும் அறிக்கை கூறுகிறது.

குறிப்பாக வர்த்தகர்கள், ஜவுளி விற்பனையாளர்கள் (6-ம் பக்கம் பார்க்க)

## 'அமெரிக்க மிஷனரியை நாம் மறக்கமுடியாது'

### யாழ். மேயர் பேச்சு

யாழ்ப்பாணம், புதன்

''அமெரிக்காவுக்கும்நமது நாட்டுக்குமிடையில் ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேலாக தொடர்புகள் இருந்து வருகின்றன. அமெரிக்க மிஷனரி நம்மவர்கள்படித்துத் தலைசிறந்த கல்விமான்களாக வருவதற்குச்செய்துதந்த கல்விவசதிகளை நாம் என்றும் மறக்க முடியாது. அடிக்கடி இப்படியான நிகழ்ச்சிகளை நமக்கு அளிப்பது அமெரிக்காவுக்கும் நமக்குமிடையேயுள்ள நல்லுறவையும் நட்புறவையும் வளர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும்.''

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் சென்ற திங்கட்கிழமை மாலை நடைபெற்ற அமெரிக்க இண்டியானா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 'ஜாஸ்' இசைக் கோஷ்டியினரின் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். நாகராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. நாகராசா மேலும் (6-ம் பக்கம் பார்க்க)

## சுவாமி பிரணவானந்தஜி யாழ்ப்பாணம்வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

மலாயா திவ்ய ஜீவன சங்கத் தலைவர் ஸ்ரீமத்சுவாமி பிரணவானந்தஜி அடுத்த வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கிறார். சுவாமி தவத்திரு யோகர் சுவாமிகளின் நீண்டகால அடியாரும், ரமண மகரிஷிகள், ஸ்ரீ அரவிந்தயோகி, இமயஜோதி ஸ்ரீசுவாமி சிவானந்த ஆகியோருட்பட பல அருளாளர்களின் அனுக்கிரகத்தைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண விஜயம் செய்யும் சுவாமிகளுக்கு புங்குடுதீவிலும் மாபெரும் வரவேற்பளிக்க புங்குடுதீவு திவ்ய ஜீவன சங்கம் தீர்மானித்துள்ளது.

## அத்தியாவசிய பொருட்கள்

பம்பலப்பிட்டி, செவ்.

கொழும்புத்துறைமுகத்திற்கு வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகியவை உட்பட ஏராளமான அத்தியாவசியப்பொருட்கள்வந்து சேர்ந்திருக்கின்றன. மோட்டார் உறுப்புக்கள், மீன் [illegible] இருக்கின்றன.

யாழ்ப்பாணம்

## விற்பனவு இலாகா கிளையை இடமாற்றம் செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் முக்கிய உணவுப் பொருட்களை விநியோகிக்கும் விற்பனவு இலாகாக் கிளைகள் இல்லாததால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைகிறார்களெனவும், பொதுமக்களுக்குப் பொருட்கள் சுலபமாகக் கிடைக்கக்கூடிய விதத்தில் சில யோசனைகளை அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸுக்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அம்மகஜரொன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

''தற்பொழுது உள்ள விற்பனவு இலாகாக்கிளை சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகத்திற்கு முன் உள்ளது இது பெரியகடையில் இருந்து 2 மைலுக்கும் சின்னக்கடையிலிருந்து அப்பால் 1 மைலுக்கும் உள்ளது. இதனால் பெரியகடைக்கும் சின்னக்கடைக்கும் சாமான்கள் வாங்கப் போகும் பொதுமக்கள் கட்டுப்பாட்டு விலைகளுக்குத் தமது பொருட்களை வாங்க முடியாமல் இருக்கின்றார்கள்.

ஆகையால் எமது சங்கம் சில யோசனைகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

யாழ்ப்பாணம் பெரிய கடை, சின்னக்கடை இன்னும் முக்கிய சந்திகளிலும் விற்பனவு இலாகாக் கிளைகளை உடனே திறக்க வேண்டும்.

கொழும்பு புகையிரதநிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கட்டிடங்களைப் போல பல கட்டிடங்களை முக்கிய இடங்களில் அமைத்தல்.

இந்த நிலையங்களின் வியாபார நேரம், அரசாங்க காரியாலய நேரம்போல் அமையாமல் வர்த்தக, சட்ட நேரத்திற்கு அமைய வேண்டும். விலைவாசியை குறைக்க வேண்டுமானல் பொதுமக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும், ஏனைய கடைகளில் பொருள்கள் வாங்கக் கூடியதாக உள்ள நேரம் வரை இக்கடைகள் திறந்திருக்க வேண்டும்.

இம்மகஜரின் பிரதிகள் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜீ. ஜி. பொன்னம்பலம், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மீண்டும்

## மட்டக்களப்புக்கு விமான சேவை

பம்பலப்பிட்டி, செவ்.

கொழும்பிலிருந்துமட்டக்களப்புக்கு மீண்டும் விரைவில் விமானப் போக்குவரத்து ஆரம்பிக்கப்படுமென போக்குவரத்து மந்திரி திரு. ஹுருல உறுதியளித்திருக்கிறார்.

மட்டக்களப்பு எம். பி. திரு இராசதுரை, பட்டிருப்பு எம். பி. திரு. இராசமாணிக்கம, அமைச்சின் இதர அதிகாரிகள் ஆகியோர் நடாத்திய ஒரு மகாநாட்டில் மந்திரி இவ்வாறு உறுதியளித்தார்.

அச்சிடும் தாள்கள் முதலியன, அப்பியாசப் புஸ்தகங்கள், மலிபன் விஸ்கோத்துகள், தங்காலு தேயிலை, மற்றும் ஏக வினியோகப் பொருட்கள் எமது மொத்த விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,

(வரையறுக்கப்பட்டது.)

மொத்த விற்பனை நிலையம்,

287, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

## திருமண அழைப்பு

### வன்னியசேகரம் — சிந்தாமணி

கோப்பாய் வழக்கறிஞர் திரு. வ. முத்துக்குமாரசாமி திருமதி முத்துக்குமாரசாமி அவர்களது மகன் திரு வன்னியசேகரத்திற்கும் (உதவிச்சிறுப்பர், நாஷனல் வங்கி, கண்டி) காலஞ்சென்ற திரு. இராசா அருளம்பலம், திருமதி இராசா அருளம்பலம் அவர்களது மகளும், திரு. இ. சேனாதிராசா திருமதி மனோன்மணி அருணாசலம் அவர்களது சகோதரியுமாகிய செல்வி சிந்தாமணிக்கும் 11—2—66 வெள்ளிக்கிழமை அதிகாலை 5-00 மணிக்கும் 6-00 மணிக்கும் இடையில் உள்ள சுபமுகூர்த்தத்தில் நல்லூர்ச் சிவன் கோவிலில் திருமணம் நடைபெறும். அன்று மாலை 5 மணிக்கு மணமகள் இல்லத்தில் (29, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) விருந்துபசாரம் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 1595

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பத்திரிகைகள்தான் இக்காலத்திலே மக்களின் வேதமாகும். இன்று வேதங்களைப் படிக்கும் மக்கள் மிகக் குறைவு. ஆனால் பத்திரிகைகளை அநேகமாக எல்லாரும் விரும்பிப் படிக்கிறார்கள். ஆகவே வேதமெழுதியவர்களைப் போன்றதே இக்காலத்தில் பத்திரிகைக்காரர்களின் பொறுப்புமாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49 JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 38

ஈழ பாணம் விசுவாவசு ஆண்டு தை மீ 27 உ (9-2-66)


## எட்டாவது ஆண்டு

திருவருள் துணையால் உங்கள் அபிமானப்பத்திரிகையான 'ஈழநாடு'வுக்கு ஏழாண்டுகள் நிறைந்து இன்றுடன் எட்டாவது ஆண்டு பிறக்கின்றது. மகிழ்ச்சியான இந்தச் சமயத்தில் இதுவரை தன்னை அன்புடன் ஆதரித்து வளர்த்துவரும் எல்லோருக்கும் தன் நன்றி கலந்த வணக்கத்தை 'ஈழநாடு' தெரிவித்துக் கொள்ளுகின்றது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக 'ஈழநாடு' ஒரு வாரப் பத்திரிகையாக வெளிவந்தது. மறுவருடம் வாரம் இருமுறையாகவும், அடுத்த ஆண்டிலிருந்து தினசரியாகவும் வளர்ந்து வந்துள்ளது. இப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு இது நல்லதோர் சான்று. ஏழு நாட்களுக்கு ஒரு முறையாக வெளிவந்தபோது இருந்த வாசகர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் இப்போது பன்மடங்கு பல்கிப் பெருகியுள்ளது. இதைப் பார்க்கையில் ஈழத்துத் தமிழ்பேசும் மக்களின் அன்பையும் ஆதரவையும் இப்பத்திரிகை எவ்வளவு தூரம் பெற்று வருகின்றதென்பதை உணர முடிகிறது. இந்த உணர்வு நமது பெரும் பொறுப்பை உணரச்செய்யவும், நம்மை இம்மக்களின் பணிக்கு மேலும் அர்ப்பணிக்கவும் செய்வதாகவுள்ளது.

உண்மையான செய்திகளை உடனுக்குடன் சுடச்சுடக் கொடுப்பதே தினசரிப் பத்திரிகைகளின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இவ்வகையில் 'ஈழநாடு' இப்பகுதியிலுள்ள பொதுமக்களின் பாராட்டுதலை வெகுவாகப் பெற்று வருகிறதென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. கொழும்பிலிருந்து வரும் ப்ரபல ஆங்கில தினசரிகளுக்கும் முன்பாக இங்கு பலமுதல் தரமான செய்திகளையும் 'ஈழநாடு' தெரிவிக்கின்றதென்று பலரும்பாராட்டி வருகின்றார்கள். தலைநகரிலிருந்து வெகுதூரத்திலிருந்தும் இதை எவ்விதம் செய்ய முடிகிறதென்றும் வியப்புறுகின்றனர். 'ஈழநாடு' பத்திரிகையின் ஊழியர்களின் ஊக்கமும் உற்சாகமும் தியாக சேவையுமே இதற்கு முக்கிய காரணமாகும்.

கட்சி அரசியல் தலைதூக்கி, தேசியப் பொதுநலக் கருத்துகள் குறையும்போது விருப்புவெறுப்பின்றி, பொதுமக்களின் பணியே தெய்வப் பணி என்று தொண்டாற்ற வேண்டுமென்பதே நமது குறிக்கோள். இவ்விஷயமாக 'ஈழநாடு' பத்திரிகையைப்பற்றி சிற்சில அரசியல் வட்டாரங்களில் ஆரம்பத்தில் இருந்த ஐயப்பாடுகள் இப்போது பெரிதும் மறைந்து வருகின்றது. தமிழர் ஒற்றுமை, தமிழர்-சிங்களவர் ஒற்றுமை, இலங்கை-இந்தியா நட்புறவு, உலக சமாதானம் இவற்றுக்காகத் தொண்டாற்ற வேண்டுமென்பதே நமது இலட்சியம். இது மெதுவாகக் கைகூடுவதற்கான நல்ல அறிகுறிகளைக் காண மகிழ்ச்சியாகவுள்ளது.

ஏழு ஆண்டுகளுக்குமுன் இலங்கையில் இருந்த நிலையுடன் ஒப்பிடுகையில் இன்று பல துறைகளிலும் கரிய மேகங்கள் கலைந்து. தேசிய ஒற்றுமை, சமூக ஒற்றுமை முதலியவற்றுக்கான புதிய நம்பிக்கை உதயமாகியிருப்பதைப் பார்க்கின்றோம். இந்தியா-இலங்கை பிரச்னையும் தீருவதற்கான வழி பிறந்துள்ளது. இந்தியா-பாகிஸ்தான் இவ்விரு நாடுகளுக்கிடையிலும் பழைய கசப்புகள் குறைந்து புதிய உறவு ஏற்பட்டு வருகின்றது. புதிதாக விடுதலையடைந்துள்ள தென்கிழக்கு ஆசியநாடுகளுக்குள்ளே புதிய நல்லுறவையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பு இலங்கைக்கு அதிகமாக ஏற்படுவதுடன் ''ஆசியாவின் ஸ்விட்ஸர்லாந்''தாகவும் எல்லா நாடுகளுக்கும் பொது நட்பு நாடாகவும் இருந்து சமாதானத்தையும் சுபிட்சத்தையும் வளர்க்கச் செய்யவும் வேண்டியுள்ளது. இதற்கு அடிப்படையாக இலங்கையில் அமைதியும் தேசிய ஒற்றுமையும் ஏற்பட வேண்டியது அவசியம். அதற்கான வகையில் கூடிய தொண்டாற்ற 'ஈழநாடு' தன்னை இன்று மீண்டும் புதிய ஆர்வத்துடன் அர்ப்பணித்துக் கொள்ளுகின்து.

ஒரு தினசரிப் பத்திரிகையை யாழ்ப்பாணம் போன்ற இடத்தில் ஆரம்பித்து நடத்தி வருவதென்பது சுலபமன்று. எவ்வளவோ சங்கடங்கள், வசதிக் குறைவுகள். முன்னர் பல பெருமக்கள் முயன்றும் கைகூட முடியாத ஒரு பணியை 'ஈழநாடு' சென்ற சில வருடங்களாகத் துணிச்சலுடன் வெற்றிகரமாகச் செய்ய முடிவதை நினைக்க மகிழ்ச்சியும் பெருமையுமளிக்கின்றது. 'ஈழநாடு' பத்திரிகையின் சரித்திரத்தில் இப்போது நல்லதோர் திருப்பம் ஏற்பட்டுள்ளதென்பதை சந்தோஷத்துடன் தெரிவிக்கின்றோம். இனி மேன்மேலும் தமிழன்பர்கள், வர்த்தகப் பெருமக்கள் இவர்களது ஆதரவாலும் ஒத்துழைப்பாலும், இப்பத்திரிகை பூரணப்பொலிவுடன் தன் புனிதப் பணியைத் தீவிரமாகச் செய்ய எல்லாம் வல்ல இறைவனின் இன்னருளைப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

சுவிட்சர்லாந்து அரசியல் அமைப்பு

## கிராமசபைகளுக்கு அதிகசுதந்திரம்

(நேற்றைய தொடர்ச்சி)

தலைமை அரசாங்கத்திடம் அதிக அதிகாரங்கள் ஒப்புவிக்கப்பட்டதென்றும், ஒவ்வொரு காண்டனிலும் உண்மையான ஜனநாயக ஆட்சி நடைபெற முடிகிறது. மேலும் காண்டன் ஆட்சி முறைக்கும், சமஷ்டி ஆட்சிக்கும்பரஸ்பரம் உறவு அதிகமுண்டு. காண்டன் ஆட்சியைச் சேர்ந்த 40 பேர் இப்போது சமஷ்டிப் பார்லிமெண்டில் அங்கம் வகிக்கின்றனர். கல்வி, பொருளாதாரம், பொலிஸ் முதலிய அதிகாரங்களெல்லாம் மண்டல ஆட்சிக்கே உண்டு. அந்த அதிகாரிகள் எல்லோரும் அடிக்கடி சமஷ்டி அதிகாரிகளுடன் மகாநாடு கூடிப் பேசுகிறார்கள்.

பெர்ன் எனும் காண்டன்தான் ஆகப்பெரியது 8 லட்சத்து 38 ஆயிரம் பேர் உளர். அபென்ஸல் இன்னல் ரோட்ஸ் என்னும் காண்டனில் 13400 பேர்களேதான் வசிக்கின்றனர். மண்டலங்களுக்கு இடையே அதிக வேற்றுமை உண்டு. என்றாலும் சமஷ்டி அரசாங்க சபையில் எல்லா காண்டன்களுக்கும் சரிசமமான ஸ்தானங்கள் அளிக்கப்படுகின்றன. அரசியல் திட்டத்தில் ஏதாவது திருத்தம் செய்ய வேண்டுமாயின் வாக்காளர் மெஜாரிட்டி மட்டுமின்றி மெஜாரிட்டிகாண்டன்களும் அதை ஆதரிக்கவேண்டும் என்பது நிபந்தனை.

வருமானவரி, மூலதான வரி முதலிய நேரடி வரிகளைக் காண்டன்களே விதித்து வசூலிக்கின்றன. சுங்கம் முதலிய மறைமுக வரிகளே தலைமை அரசாங்கத்தின் வருமான இனங்களாகும். வரி விகிதங்களை வருடாவருடம் மக்களே நிர்ணயிக்கின்றார்கள்.

### மூன்று பிரஜா உரிமைகள்

சுவிஸ் மக்கள் ஒவ்வொருவருக்கும் மூன்றுவித பிரஜா உரிமை உண்டு. சுவிஸ், காண்டன், சமூக (கம்யூன்) பிரஜாஉரிமைகளின் மூன்று முக்கியமானவை வேறெந்த இடத்திற்கு குடியேறி வசித்தாலும் ஒரு குடும்பத்தை சேர்ந்தவருக்குள்ள சமூக பிரஜா உரிமை வழிவழியாகத் தொடர்ந்து இருந்துவரும். இரண்டாவது உலக யுத்தத்திற்கு பிறகு ஜெர்மனி முதலிய ஐரோப்பிய நாடுகளில் நிலைமை மோசமானதால் அங்கு குடியேறியிருந்த சுவிஸ் பிரஜைகள், தங்கள் தாய்நாடு திரும்பி தங்கள் பழைய கம்யூன்களில் உரிமையுடன் வந்து வசித்தனர். பாட்டான், முப்பாட்டான் காலத்தில் வெளியேறியவர்கள் நாட்டையே கண்டறியாதவர்கள். இந்த ஸ்விஸ் கம்யூன் பிரஜா உரிமையின்மீது திரும்பித் தங்கள் தாய்நாட்டுக்கு வர முடிந்தது. நாட்டில் ஒருவர் எங்கு வேண்டுமானாலும் சென்று வசித்து ஆங்காங்கேயுள்ள காண்டான், கம்யூன் பிரஜா உரிமைகளையும் பயன்படுத்தலாம்.

ஸ்வீட்ஸர்லந்து மலைநாடு பள்ளத்தாக்குகளிலே பல பல கிராமங்களில் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குப் பனிச்சரிவால் எந்தச் சமயமும் ஆபத்து ஏற்படலாம். ஆபத்துக்காலத்தில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். பொதுநலம், பொதுவழி முதலியவை பொதுவாக [illegible] தால் இந்தக் கம்யூன் அல்லது சமூக ஸ்தாபனங்கள் அதிக அவசியமாயின. இதனால் நன்மையுண்டு, தீங்கும் உண்டு. தீங்கைவிட நன்மையே அதிகம்.

மொத்த சனத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற் மேல் கிராமங்களிலேயே வசிக்கின்றனர். ஆங்காங்கே சிறிய கம்யூன்களில் எல்லாப் பிரஜைகளும் கூடி பல தீர்மானங்களைப் பற்றியும் விவாதித்து முடிவு செய்கின்றார்கள். வாக்கெடுப்பு இரகசியமானதல்ல. ஆகவே விருப்பு வெறுப்பின்றிப் பலரும் விவாதத்தில் பங்கெடுப்பர். ஆகவே ஒவ்வொரு பிரஜையும் நேர்முகமாகவிட்டு நிர்வாகத்தில் சிரத்தை காட்டி ஈடுபட முடிகிறது. பெரிய நகரங்களில்தான் தேர்தல் ரகசிய முறையில் நடைபெற வேண்டியுள்ளது. கம்யூன் நிர்வாகத்தில் ஒத்துழைப்பது நல்ல அரசியற் பயிற்சியாகிறது. பெரிய அரசியற் தலைவர்களும் முதலில் தங்கள் கம்யூன் நிர்வாகத்தில் பயிற்சி பெற்றவர்களே. கம்யூன்களைக் காலி செய்து மக்கள் பெரிய நகரங்களுக்குச் சென்று குடியேறாமல் தடுக்கவும் பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

சுவிஸ் கம்யூன் அல்லது கிராமசபைகள் அதிக சுதந்திரமும், ஜனநாயகமும் வாய்ந்தவை. அவற்றின் சுதந்திரத்தில் காண்டன்கள் குறுக்கிட முடியாது. அதன் சுதந்திரத்தில் காண்டன்சபை குறுக்கிட்டால் கம்யூன்கள், சமஷ்டி உயர் நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். தனிப்பட்டவரின் சுதந்திரம் போலவே கம்யூன் அல்லது கிராமிய சுதந்திரமும் பாதுகாக்கப்படுகின்றது. பள்ளிக்கூடம், கோவில், ஏழைகள் கஷ்டநிவாரணம், மரணச் சடங்கு, ரஸ்தாக்கள், ரஸ்தா பொலிஸ் பொது ஒழுங்கு, நெருப்பு, கட்டிடம் முதலியவை பற்றிய பொறுப்பும் உரிமையும் கம்யூன் அல்லது கிராமிய சபைக்கு இருந்து வருகின்றன.

### வாக்குரிமை

இருபது வயதான ஆண்களுக்கு வாக்குரிமை உண்டு. பெண்களுக்கு வாக்குரிமை இல்லை. அந்த வயதில் ஆண்கள் கட்டாய இராணுவப் பயிற்சிக்குசெல்லவேண்டும். சில காண்டன்களில் வாக்குரிமை வயது 25 அல்லது 27 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனுபவஸ்தவர்களின் கையிலேயே நாட்டின் நிர்வாகம் இருக்கவேண்டும் என்ற சில காண்டன்கள் இவ்விதம் செய்கின்றன. அமெரிக்காவில் உயர் நீதிமன்ற நீதிபதிகளெல்லோரும் 70 வயதிற்குமேற்பட்டவர்கள் சுவிட்சர்லாந்தில் சமஷ்டி நீதிபதிகளின் சராசரி வயது 55 தான்.

அந்நாட்டில் வசிக்கும் அந்நியர்களுக்கு (1930 9%) வாக்குரிமை இல்லை. ஆனால் ஒரே ஒரு காண்டனில் ஸ்தல விஷயங்களில் அவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படுகின்றது.

பெண்களுக்குவாக்குரிமை இல்லாததுபற்றி சிலர்வியப்படையலாம். பெண்களுக்கு சரியான இடம் குடும்பந்தானென்றும், பொது வாழ்வு அல்லவென்றும் இருந்த பழைய ஜெர்மன் வழக்கம் இன்றும் இங்கு பின்பற்றப்படுகிறது. இது பற்றி இங்கு பெண்களும் கிளர்ச்சிசெய்வதில்லை. வாக்குரிமை வந்தவுடன் ஆண்

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

''ஏழு வருடங்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்திலே 'ஈழநாடு' வாரப் பத்திரிகையாக ஆரம்பித்தபோது இது அதிகநாள் நடக்காது என்று நான் நினைத்தேன். எவ்வளவோ பத்திரிகைகள் இங்கு தோன்றித் தோன்றி மறைந்துவிட்டன. இதன தலையெழுத்தும் அப்படித்தான் இருக்குமென்று அஞ்சினேன் ஆனால் இது ஒரு சிறந்த தினசரிப் பத்திரிகையாக வளர்ந்து பொது மக்களின் அபிமானத்தை நாளுக்கு நாள் அதிகமாகப் பெற்று வருவதைக்காண மிக மிக மகிழ்ச்சியாகவுள்ளது. ஈழநாடு வாழ்க!''

என்று யாழ்ப்பாண அறிஞரும் பழம்பெரும் நூலாசிரியருமான ஓரன்பர் நேற்று வந்துவாழ்த்தினார்,

ஃ ஃ ஃ

''ஈழநாடு'' ஒரு செய்தித்தாள் மட்டுமல்ல. இங்கு சூறாவளி அடித்து பல கடற்தொழிலாளர் உயிர் துறந்தபோது. அவர்களது திக்கற்ற குடும்பங்களுக்காக பணம் வசூலித்து. நேரில் சென்று ஒவ்வொரு குடும்பத்துக்கும் உதவி அளித்து, அவ்வப்போது கணக்கு விபரங்களையும் பேப்பரில் வெளியிட்டு வருகின்றது. எங்கள் ஊழியர்கள் கதம்ப நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்து அதன் மூலம் பணம் வசூலித்து உதவினர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த தருமபுரத்திலே பல வாரங்களாக நூற்றுக்கணக்கான ஏழைமக்கள் ரேஷன் அரிசி பெறாமல் பட்டினியால் தவித்தபோது, அவர்களுக்கு பொங்கல் பண்டிகையின் போது ஒரு வார கூப்பன் அரிசியை இலவசமாக விநியோகித்து, அவர்களது பசியை ஆற்றினோம். நேரில் சென்று சிலருக்கு துணி முதலியவற்றையும் விநியோகித்தோம். இலங்கையிலே வேறெந்த பத்திரிகை ஸ்தாபனமும் இவ்விதம் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவே 'ஈழநாடு' இப்பகுதி மக்களின் சமூகத்தொண்டனாகவுமிருந்து, அவ்வப்போது அவசியமான தொண்டாற்றவும் காத்திருக்கின்றது.

ஃ ஃ ஃ

சமீபத்தில் இந்தியா-பாகிஸ்தான் சண்டை நடந்ததல்லவா? அப்போது இலங்கையில் வேறெந்தப் பத்திரிகையும் செய்யாத முறையில் இருபக்கத்து செய்திகளையும் விருப்பு வெறுப்பின்றி விளக்கமாகப் பிரசுரித்ததாகப் பலஅன்பர்கள் பாராட்டினர். பாகிஸ்தான் ஹைகமிஷனும் கூட நமது நடுநிலைமையைப் பாராட்டி கடிதம் எழுதியிருந்தது. இந்திய அரசாங்க ஆதரவிலே பிரசுரமாகும் ஓர் ஆங்கில சஞ்சிகையும் 'ஈழநாடு' தலையங்கத்தை எடுத்துப் பிரசுரித்திருந்தது. இருதரப்பினரும் இவ்விதம் எழுதியது, நமது நடுநிலைமைக்கு ஒரு நல்ல அத்தாட்சி.

இருநாடுகளும் சண்டை செய்யாமல் தகராறை பேச்சுக்கள் மூலம் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற நமது பிரார்த்தனையும் நிறைவேறி வருவதைக் காண மிக மகிழ்ச்சியாகவுள்ளது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலிருந்து இரு அன்பர்கள், போர்னியோவைச் சேர்ந்த புருணேய்க்குச் சமீபகாலத்தில் சென்று கடமையாற்றி வருகின்றனர் யாழ்ப்பாண மாநகர சபையில் மெம்பராக இருந்தவரும் சென், ஜோன் கல்லூரி ஆசிரியராக

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் புதிய தேர்தல் அடுத்த மாதம் நடைபெறுமா?

## மந்திரிசபையில் ஆலோசிக்கப்பட்டது

லண்டன், பெப். 8

**பிரிட்டனின் புதிய தேர்தல் அனேகமாக அடுத்த மாதமோ அன்றி ஏப்ரல் மாதத்திலே நடைபெறுமெனப் பலமாக நம்பப்படுகிறது. தேர்தலை எப்பொழுது நடத்துவது என்பது பற்றி மந்திரிசபை ஆலோசனை செய்துள்ளதெனினும் முடிவுபற்றி மகாராணி நாடுதிரும்பும் வரை அறிவிக்க முடியாமலிருக்கிறது.**

பிரிட்டனில் நடைபெறவிருக்கும் தேர்தல் ஒழுங்குகளை கவனிப்பது பற்றி பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹரல்ட் வில்சன் தமது சக மந்திரிகளுடன் ஆலோசனை நடத்தியதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

லண்டனில் உள்ள பிரதமரது உத்தியோக வாசஸ்தலத்தில் ஒரு முழுநாளாக இந்த ஆலோசனை நடைபெற்றதாகவும் அனேகமாக மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடைபெறலாம் எனவும் நம்பப்படுகிறது. ஆனல் வெளிநாடுசென்றுள்ள மகாராணி எலிசபெத் நாடு திரும்பும் வரை தேர்தல் பற்றி சட்டப்படி எவ்வித அறிவித்தலும் வெளியிட முடியாதெனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

(பி. டி. ஸி)

# "பொருளாதாரத்தை விருத்தி செய்ய ஒத்துழைப்புத் தேவை"

துணுக்காய், செவ்

"ஒருதுளி இரத்தமும் சிந்தாது இந்நாட்டுக்கு உயிரினுமினிய சுதந்திரத்தைப்பெற்றுக்கொள்ளக்கூடிய தான நிலைமை ஏற்பட்டது. எமக்குக் கிடைத்த பெரும்பாக்கியமும் வரப்பிரசாதமுமாகும். பெற்றுக்கொண்ட சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாப்பதுபற்றி நாம் ஜாக்கிரதையாகவும் ஒற்றுமையாகவும் முயற்சிக்க வேண்டும். சீர்கேடான எமது பொருளாதார நிலைமையைத் திருத்தியமைக்க சாதி, இன, மத மொழி வேறுபாடற்ற முறையில் நாமெல்லாம் தேசிய அரசாங்கத்திற்கு எம்மாலான ஒத்துழைப்பு நல்கவேண்டும்".

இவ்வாறு துணுக்காய்ப் பிரிவுக்காரியாதிகாரி திரு. எம் இராசரத்தினம் துணுக்காய்ப்பிரிவில் நடைபெற்ற சுதந்திரதினவிழா வைபவத்துக்குத் தலைமை வகித்துப் பேசும்போது கூறினர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பின்தங்கியதும் ஆனல் வளர்ச்சியுற்று வருவதும் புராதன வன்னியுமான துணுக்காய்ப் பிரிவில் முதன் முதலாக சுதந்திர தினக் கொண்டாட்டம் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டன.

அதிகாலை 8 மணிக்கு தேசியக்கொடியை உயர்த்தி மங்கள தீபாராதனைகளோடு பிரிவுக் காரியாதிகாரி திரு. எம். எம், இராசரத்தினம் விழாவை ஆரம்பித்துவைத்தார்.

பிரிவிலுள்ள ஆலயங்களில் விசேட பூசைகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து துணுக்காய்ப் பகுதிக் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் கிராமமுன்னேற்றச் சங்க அங்கத்தவர்களுக்கும் இடையே கிரிக்கெட், கைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன. துணுக்காய் கிராமசபை அக்கிராசனரும் மற்றும் கிராமவிருத்திச் சங்கத் தலைவர்களும் சொற்பொழிவாற்றினர். ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விருந்தினர்களுக்கு சிற்றுண்டி தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

யோகபுரம் 3-ம் யூனிட் பாடசாலை மாணவர்களால் தேசியகீதம் பாடிவைபவங்கள் இனிது முடிவெய்தின.

வன்னேரிக் குளத்திலும் இப்படி வைபவம் நடைபெற்றது. காரியாதிகாரி திரு. எம். இராசரத்தினம் இலங்கை சுதந்திரம் அடைந்த வரலாறுபற்றிச் சொற்பொழிவாற்றினர்.

# மன்னர் மகளுக்கு திருமணம்

காட்மாண்டு, பெப். 8

நேபாள மன்னர் மகேந்திராவின் மூத்த புதல்வியான இளவரசி சாந்தி ஷாவுக்கும் குன்மார் தீபாக் ஜங்பகதூருக்கும் நாளை புதன்கிழமை திருமணம் நடைபெறவிருக்கிறது. வனச் சொந்தக்காரரான பகதூருக்கு வயது 25 ஆகும். இளவரசி சாந்தி மகேந்திர மன்னரின் முதல் மனைவியான காலஞ்சென்ற இராணி இந்திராராஜலஷ்மி தேவியின் மகளாவர். இராணி இந்திரா, தற்போதைய இராணி ரத்னவின் மூத்தசகோதரியாவார்.

(பி. டி. ஐ.)

# "ஆண்களும் குடும்பக்கலை பயிலவேண்டும்"

புதுடில்லி, பெப். 8

'குடும்பக்கலை பெண்களுக்குமட்டும்தான் உரியதல்ல அவர்கள் மட்டும்தான் அதைப் படிக்கவேண்டும் என்பதல்ல. ஆண்களும் அக்கலையில் தேர்ச்சிபெற வேண்டும்' என்று ராஜ்ய சபாவின் உபதலைவி திருமதி வொயிலெட் அல்வா, மகளிர் கல்விக்கான தேசியக் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

'குடும்ப நிர்வாகத்தைப் பற்றி பெண்கள் பயிலுவது போல ஆண்களும் அதில் பயிற்சிபெற வேண்டியது அவசியம் என்றும் நல்ல கணவர்களும், சிறந்த தந்தையாகவும் விளங்கும் பொருட்டு ஆண்களுக்கு இதுவரை பயிற்சியளிக்காதது வருத்தத்துக்குரியதாகும்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

(பி. டி. ஐ)

# இடமாற்றம் ரத்து

யாழ்ப்பாணம். புதன்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இடமாற்றம் செய்யடபட்டிருந்த அரசாங்க லிகிதர்சேவை சங்கத்தின் யாழ் கிளைக் காரியதரிசி திரு. இ. இரத்தினசபாதியின் இடமாற்றம் யாழ். கிளைச் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாக ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. அண்மையில் நடைபெற்ற யாழ். கிளையின் விசேஷ கூட்டத்தில் இவரின் இடமாற்றம்பற்றி அரசாங்கத்துக்குத் தமது வருத்தத்தை யாழ். கிளை தெரிவித்திருந்தது.

# பிறந்ததினத்தில் பெண்குழந்தை பரிசு!

கோலாலம்பூர், பெப். 8

மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அவரது 63-வது பிறந்த தினத்தை சென்ற செவ்வாய்க்கிழமை கொண்டாடினர். அன்றைய தினம் அவருக்கு ஒரு மாதப்பெண் குழந்தை ஒன்று அன்பளிக்கப்பட்டது. அப்பெண் குழந்தையின் தாயாரான திருமதி சோ. போ.சூவிடம் இதுபற்றிக் கேட்டபோது 'அன்புப் பரிசா'கவே தான் தனது குழந்தையை பிரதமரிடம் அன்பளிப்புச் செய்ததாக அவர் தெரிவித்தார்.

திருமதி சோ துங்கு தம்பதிகளின் பழைய நண்பராவர். பிரதமர் துங்குவுக்குச் சொந்தக் குழந்தைகள் இல்லை. ஏற்கனவே 13-வயதுடைய ஒரு சிறுமியையும் 11-வயதுடைய ஒரு சிறுவனையும் தனது வளர்ப்புப் பிள்ளைகளாகப் பராமரித்து வருகிறார் துங்கு.

(பி. டி. ஸி.)

# சினிமாக்காரருக்கு பெரும நஷ்டம்!

புதுடில்லி, பெப் 8

டாஷ்கண்ட பிரகடனம் இந்திய—பாகிஸ்தான் நெருக்கடிகளைத் தளர்த்த ஆசியாவின் சமாதானத்துக்கு வழிவகுத்திருப்பதாக பலரும் பாராட்டி வருகையில் அதனல் நஷ்டமடைந்தவர்கள் இந்தியத் திரைப்பட முதலாளிகளே. இந்திய-பாகிஸ்தான் நெருக்கடியை மையமாக வைத்து இந்தியாவில் பல சினிமாப் படங்கள்தயாராகி வந்தன. ஆனல் டாஷ்கண்ட் பிரகடனத்தில்இவ்விதமான படங்களைத் திரையிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்திய-பாகிஸ்தான் நெருக்கடியை மையமாக வைத்துப்படம் தயாரித்துவந்த முதலாளிகளை அவற்றை மேலும் வளர்க்காது உடனே நிறுத்துமாறு இந்திய தேசிய திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் கோரியுள்ளது.

(பி. டி. ஸி)

# ஜப்பான்- இந்திய பேச்சுவார்த்தை

டோக்கியோ, பெப். 8

முன்னர் எப்பொழுதும் நடந்திராதவகையில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே அடுத்த மாத முற்பகுதியில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. புதுடில்லியில் நடைபெறவிருக்கும் இந்தப் பேச்சுவார்த்தைகள் ஜப்பானுக்கும் ஆசியநாடொன்றுக்குமிடையில் நடைபெறும் முதல் பேச்சுவார்த்தையுமாகும்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது வியட்னும் பிரச்னை, அணு ஆயுத நெருக்கடி, ஆபிரிக்க-ஆசிய நாடுகளின் பிரச்னை ஆகியவை உட்பட இரண்டு நாடுகளுக்கும் முக்கியமான வேறுபல பிரச்னைகளும்விவாதிக்கப்படும்.

(பி. டி. ஐ)

# ஊழியருக்கு கிராக்கிப்படி

புதுடில்லி, பெப். 8

மாதம் ஆயிரம் ரூபாய் வரையில் சம்பளம் வாங்கும் மத்திய அரசாங்க ஊழியர்களின் கிராக்கிப்படியை உயர்த்துவதென அறிவிக்கப்பட்டது. 1965 டிசம்பர் மாதம் இந்தப் புதுவிதிகள் அமுலுக்கு வந்திருப்பதாகக் கருதப்படும். இதனல் மத்திய அரசாங்கத்துக்குசுமார் 25 கோடி ரூபா மேலதிகமாக செல்வாகும் எனமதிப்பிடப்பட்டுள்ளது.

# மதுரை சர்வகலாசாலையை கவர்னர் ஆரம்பித்து வைத்தார்

## உபவேந்தர் பேராசிரியர் தெ. பொ. மீ. க்கு பாராட்டு

மதுரை பெப். 8

மதுரை சர்வகலாசாலையை சென்னை பதில் கவர்னர் திரு. சந்திரா ரெட்டி ஆரம்பித்து வைத்தார்.

மதுரையில் புது சர்வகலாசாலை ஏற்படுவது பற்றி மகிழ்ச்சியடைவதாகவும் உயர்தரக் கல்வித்துறையில் சென்னை ராஜ்யத்தின் முன்னேற்றத்தில் இது மற்றோர் மைல்கல் என்றும் அவர் கூறினர்.

தமிழில் உயர்தரப்படிப்பு, ஆராய்ச்சி முதலியவற்றிலும் தென்இந்திய வரலாற்றிலும் தொல்பொருள் ஆராய்ச்சியிலும் மதுரை சர்வகலாசாலை விசேஷ கவனம் செலுத்துவது மிகவும் பொருத்தமுடையது என்றும் சந்திரா ரெட்டி கூறினர்.

மதுரை சர்வகலாசாலையின் உபவேந்தர் பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சென்னை சர்கலாசாலை தந்துள்ள தனிச்சிறப்பு வாய்ந்த அறிஞர் என்றும், அவருடைய தலைமையில் புதிய சர்வகலாசாலை ஆண்கடுள் செல்லச் செல்ல தனக்கே உரிய தனிச்சிறப்புகளுடன் விளங்கும் என்றும், அந்தக் கலைக்கோவிலில் பயிற்சி பெற்றவர்கள் உலகின் அறியாமை இருள்போக்கி அறிவு ஒளி பரப்பும் அறிவுத்திறன் மிகுந்தவர்களாக விளங்குவார்கள் என்ற நம்புவதாகவும் சந்திராரெட்டி கூறினர்

### விஞ்ஞானம் தொழில்நுட்பம்

நாட்டின் தொழிலில் முன்னேற்றத்திற்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவை மிகவும் முக்கியம் என்று திரு சந்திராரெட்டி வலியுறுத்தினர். அவர் மேலும் கூறியதாவது: "நமது நாட்டில் தொழில் புரட்சி சகாப்தம் ஆரம்பமாகியிருக்கிறது. ஆகவே விஞ்ஞானம் தொழில் நுட்பம் ஆகியவற்றில் நாம் தீவிரமாக ஆராய்ச்சி நடத்த வேண்டியது மிகவும் அவசியம். இந்தப்பாடங்களுக்கு நமது சர்வகலாசாலை மிகவும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும்".

"ஆலயங்கள் நிறைந்த மதுரைமாநகரின் சரித்திரத்திலே, புதிய சர்வகலாசாலை ஆரம்பமாகும் இன்று ஒரு பொன்னுன நாள்" என்று சர்வகலாசாலைத் துவக்க விழாவுக்குத் தலைமை வகித்துப்பேசியமுதல்மந்திரி திரு. பக்தவத்சலம் குறிப்பிட்டார்.

ஒரு சர்வகலாசாலை வேண்டும் என்று, மதுரை நீண்டகாலமாகக் கோரி வந்திருப்பதாகவும், அந்தக் கோரிக்கை பூர்த்தியாகிவிட்டதாகவும் திரு. பக்தவத்சலம்கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது "சர்வகலாசாலைகளில் எண்ணிக்கையைக் கண்டபடி பெருக்கிக் கொண்டு போகக்கூடாது. முற்போக்கில் உள்ள இந்திய சர்வகலாசாலைகளில் ஒன்றாகிய சென்னை சர்வகலாசாலை ராஜ்யத்தில் உள்ள எல்லாக் கல்லூரிகளையும் கவனித்துக் கொள்வது கஷ்டமாக இருப்பதாகசமீபகாலத்தில் உணர ஆரம்பித்தது. ஆகவே மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்யாகுமரி முதலிய 4 தென்னுட்டுஜில்லாக்களின்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்தப் புதுச் சர்வகலாசாலை இப்போது ஏற்பட்டிருப்பது மிகவும் பொருத்தமுடையது. இன்னும் 2 சர்வகலாசாலைகளைச் சென்னை ராஜ்யத்தில் ஏற்படுத்துமாறு கோரிக்கைகள் இருக்கின்றன ஆனல் உடனடியாக இந்தக்கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாது. ஆனல் அந்தச் சர்வகலாசாலைகளும் விரைவில் ஏற்படும்.

### பேராசிரியர் தெ பொ. மீ. உறுதி

பேராசிரியர் தெ பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை பேசுகையில் இளைஞர்களுக்கு தமிழ் இலக்கியம் மட்டுமின்றி விஞ்ஞானத்தையும் போதிக்க உறுதி பூண்டுள்ளது என்று தெரிவித்தார். கல்வியும், ஆராய்ச்சியும் வல்ல அறிஞர்கள் கல்லாதவர்களுக்கும் தாங்கள் கற்றுத்தேறியதைப் போதிப்பதென்றும், இதில் மாணவர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### டாக்டர் பி. டி. ராஜன்

சர்வகலாசாலையை ஸ்தாபிப்பது சம்பந்தமாக நிறுவப்பட்ட நிபுணர்கள் குழு மெம்பர் டாக்டர் பி. டி. ராஜன் ஆரம்பத்தில் வரவேற்றார். வருங்காலத் தலைவர்களை உருவாக்கும் இடம் சர்வகலாசாலையே என்று ராஜன் கூறினர்.

திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை உபவேந்தராகப் பதவி ஏற்றதையடுத்து மதுரைவாசிகள் பாராட்டு விழாவொன்று நடத்தினர். இக்கூட்டத்துக்கு டாக்டர் பி. டி. ராஜன் தலைமைவகித்தார்.

டெனிஸ்

# இலங்கைக்கு ராஜபக்ச கேடயம்

பெங்களூர், பெப் 8

இலங்கை—மைசூருக்குமிடையில் பெங்களூரில் நடைபெற்ற ராஜபக்சவெற்றிக் கேடயத்துக்கான சர்வதேச டெனிஸ் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் இலங்கை நான்கு ஆட்டங்களில் இரண்டில்வெற்றி பெற்று, வெற்றிக் கேடயத்தை இம்முறையும் தனதாக்கிக் கொண்டது.

சென்ற வருடம் நான்கு ஆட்டங்களில் மூன்றில் இலங்கை வெற்றிபெற்றுக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆண்பெண்ணுகச்சேர்ந்து கலந்து கொண்ட ஒரு ஆட்டம் வெளிச்சத் தடையினல் இடையிலேயே போட்டிமுற்றுப் பெறுமல் நிறுத்தப்பட்டது.

மைசூருடன் நேற்று இலங்கை மோதிக்கொண்ட ஆட்டங்களில் இரண்டில் வெற்றி பெற்றுக் கொண்டது பெண்கள் (சிங்கிள்) ஆட்டத்தில் மட்டும் மைசூர் வெற்றிபெற்றது

'பப்பா' வெற்றிக்கிண்ணத்துக்காக நடைபெற்ற ஆட்டங்களில் ஐந்திலும் மைசூர் இலங்கையைத் தோற்கடித்தது.

(பி.டி.ஐ.)

# அகதிகளுக்கு ரூபா 11 கோடி

புதுடில்லி, பெப். 8

நடப்பு நிதி ஆண்டில் பாகிஸ்தான் அகதிகளின் நிவாரணத்துக்கும் மறுவாழ்வுக்கும் செலவிட ராஜ்ய அரசாங்கங்களுக்கு திருத்த மதிப்பீட்டில் அரசாங்கம் 11 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கு சமமான உரிமைகள்

## புதியகல்வி மசோதா வழி வகுக்கலாம்

யாழ்ப்பாணம், புதன்

சகல ஆசிரியர்களுக்கும் சமஉரிமைகள், சலுகைகள் வழங்கக்கூடியதொரு புதிய கல்வி மசோதா விரைவில் பார்லிமெண்டுக்கு கொண்டுவரப்பட இருக்கிறது.

அரசாங்க பாடசாலைகளிலும், தனிப்பட்ட பாடசாலைகளிலும் கல்வி போதிக்கும் சகல ஆசிரியர்களுக்கும் சமஉரிமை வழங்கும் கல்விசம்பந்தமான வெள்ளை அறிக்கை விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இதற்கான புதிய திட்டமொன்றை வகுத்துவருவதாக அறியப்படுகிறது.

புதிய கல்வி மசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டு அமுல்செய்யப்படும் பட்சத்தில் அரசாங்க ஆசிரியர்களைப்போல, தனிப்பட்ட பாடசாலை ஆசிரியர்களும் ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் சேர்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் இவர்கள் அரசினர் பாடசாலைகளில் இடங்கள் காலியாகவரும் பொழுது அதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும், கல்விப்பகுதியின் உபகாரச் சம்பளம் பெறவும் இவர்களுக்குத் தகுதி உண்டென்றும் அறியப்படுகிறது.

## யானைகளுக்குப் பாதுகாப்பு

பம்பலப்பிட்டி, திங்கள்

இலங்கையில் யானைகள் அழிந்தொழிந்து போகாதபடி தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

பாதுகாப்பு நடவடிக்கைகள்பற்றி ஆராய இரு வெளிநாட்டு விஞ்ஞானிகள் இங்கு விரைவில் வரவிருக்கிறார்கள். யானைகளின் பாதுகாப்புக்கு உலக வனவிலங்குகள் பாதுகாப்பு நிதியிலிருந்து பணம் கிடைக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாலஸ்தாபனம்

யாழ்ப்பாணம், செவ்

ஆனைக்கோட்டை புளியங்கண்டு சித்திவிநாயகர்கோவிலில் இன்று நண்பகல் வாலஸ்தாபனம் நடைபெறும். கும்பாபிஷேகம் பங்குனி மாதம் நடைபெறும்.

## புதுவருட உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பழைய பொதுசன நூல்நிலையத்தில் யாழ்ப்பாணக்கிளையின் சமயக் காங்கிரஸ்கூட்டம் திரு சி. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:

போஷகர்கள்: வண. எமிலியன்ஸ்பிள்ளை, வண. ஜே. ஏ. ஆர். நவரத்தினம், வண. நடராமநாயகதேரோ, திரு. ரி. முத்துசாமிப்பிள்ளை, ஸ்ரீ குமாரசாமிக்குருக்கள்.

தலைவர்: திரு. ஸி. தனபாலசிங்கம், உபதலைவர்கள் டாக்டர் வி. ரி. பசுபதி, வண எஸ். எஸ். செல்வரத்தினம், திரு. எம். எம். அப்துல்காதர், திரு. எஸ். சூரசங்காரம், பொதுக்காரியதரிசி: டாக்டர் டி. ஆர். குணசேகரம், இணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள்: எஸ். பொன்னையா, எஸ். ஸ்ரீநிவாசன், துணைக்காரியதரிசிகள்: திருவாளர்கள்; எஸ். செல்வராசா, எஸ். பாலகுமாரன், ரி ஐ. ஏபிரஹாம். பொருளாளர்: திரு. எஸ். கனகரத்தினம், துணை பொருளாளர்; திரு. எஸ். செல்வராசா.

17 பேர்கொண்ட ஒரு சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## போட்டிமுடிவுகள்

ஊர்காவற்றுறை, செவ்.

தீவுப்பகுதிக் காரியாதிகாரிகள் ஒழுங்கு செய்யப்பட்ட சுதந்திரதின விளையாட்டுப்போட்டிகள் ஊர்காவற்றுறையில் நடைபெற்றன. காரியாதிகாரி திரு. பற்றிக் இலங்கையின் தேசியக் கொடியை ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாயின. திரளானோர் விளையாட்டு அரங்கத்தில் கூடியிருந்தனர்.

**போட்டி முடிவுகள் விபரம்**

சைக்கிள் 20 மைல் ஓட்டம்: ஏ. ரி. பெனுண்டோ, சென்ஜேம்ஸ் சனசமூக நிலையம், ஊர்காவற்றுறை. ஐ. திருநாவுக்கரசு தங்கொடை, காரைநகர். எஸ். மரியதாஸ், அர்ச். சூசை அப்பர் இளைஞர்மன்றம், ஊர்காவற்றுறை.

நீச்சல்போட்டி: ஏ. ரி பெர்னாண்டோ சென்ஜேம்ஸ் சனசமூகநிலையம், ஊர்காவற்றுறை. ஏ. எவ். சிங்கராயர், சென். ஜேம்ஸ் சனசமூகநிலையம், ஊர்காவற்றுறை. ஜி. கொலின், திரு இருதய சனசமூகநிலையம், மெலிஞ்சிமுனை.

கைகால் கட்டி நீந்துதல்: திரு. ஆசீர்வாதம் தோமஸ், திரு இருதய சனசமூகநிலையம், மெலிஞ்சிமுனை.

வள்ளப் போட்டி: மெலிஞ்சிமுனை, திரு இருதய சனசமூகநிலையத்தினர். சென். ஜேம்ஸ் சனசமூகநிலையத்தினர், அர்ச். சூசை அப்பர் இளைஞர்மன்றத்தினர்.

## பாராட்டுவிழா

மீசாலை, செவ்வாய்

மீசாலை விக்னேஸ்வர வித்தியாலயமண்டபத்தில் திரு. மு. தா. சுப்பிரமணியம் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதைப்பாராட்டுமுகமாக ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம், திருவாளர்கள் ஆர் டி. சிவகுரு, ச. சுப்பிரமணியம், க. குமாரசாமி உட்பட பலரும் அவரைப் பாராட்டிப் பேசினர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# 'வடிகால் பிரச்னையை தீர்க்க நெதர்லாந்துநிபுணர்கள் உதவுவர்'

## இலங்கையிலுள்ள தூதுவர் தகவல்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் வடிகால் பிரச்னை தீராத பிரச்னையாக இருக்கிறதென்றும் இது சம்பந்தமாக செயலாற்றுவதற்கு நெதர்லாந்தைச் சேர்ந்த நிபுணர்கள் இங்கு வரவிருக்கிறார்களென்றும் நெதர்லாந்தின் இலங்கைத் தூதுவர் திரு. ஹல்லோ பேசுகையில்குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்வையிட்ட திரு. ஹல்லோவுக்கும், திருமதி ஹல்லோவுக்கும் நெல்லியடியில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவமொன்றில் திரு. ஹல்லோ பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு ஹல்லோ மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''நாட்டின் மற்றைய பகுதிகளைவிட யாழ்ப்பாணத்தில் டச்சுக்காரர்களில் அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளையும், ஆலயங்களையும் பார்க்கக்கூடியதாக இருக்கிறது அண்மையில் குருநாகலையில் நடைபெற்ற சுதந்திரதினவிழாவில் சகல இனமக்களும் ஒன்றுகூடி சுதந்திர தினவிழாவைக் கொண்டாடியதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.''

யாழ்ப்பாண மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. சபாரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

இந்த நாட்டின் முன்னேற்றங்கள் சகலவற்றுக்கும் வழிவகுத்தவர்கள் டச்சுக்காரர்கள் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இலங்கையைப்போன்றே நெதர்லாந்தும் ஒரு சிறிய நாடு அவர்களும் ஜனநாயக ஆட்சியிலேயே நம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கக்கூடிய விதத்தில் நெதர்லாந்து நிபுணர்கள் பணியாற்றித்தருவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

திருவாளர்கள் கே. வி. ராஜசிங்கம், ஸ்ரீகந்தராசா, நாகராசா, சிவப்பிரகாசம் உட்பட பலரும் பேசினர்.

ஹல்லோ தம்பதிகளுக்கு டாக்டர் பத்மநாதன் தம்பதிகள் அவரது இல்லத்தில் இரவுவிருந்தளித்தனர்.

(ந நி.)

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் வில்லூன்றி விரகத்தி விநாயகராலயத்தில் மணவாளக் கோலத் திருவிழா இன்று நடைபெறவிருக்கிறது அதிகாலையாகாதி கருமங்களும், சங்கு பூசையும், பத்துமணியளவில் விநாயகருக்கும் பஞ்ச விநாயகருக்கும் பூசையும் நடைபெறும்.

மாலைசமயப்பிரசாரகர் திரு த. சுப்பிரமணியம் 'முருகயினர்' என்னும் பொருள் குறித்து கதாப்பிரசங்கமும் நிகழ்த்துவார்.

மீசாலை, செவ்வாய்

புளியம்பொக்கணையில் பஸ் சேவையை இணைப்பதற்காகப் போடப்படும் பிரமதான பாதையை செப்பனிட வடபகுதியில் இருந்து செல்லும் தொண்டர்களின் பிரயாண வசதிக்காக குறித்த இரண்டு தினங்களிலும் காலை 6 மணிக்கு ''புளியம்பொக்கணை'' என்ற பெயர்ப்பலகையுடன் விசேட பஸ் சேவை நடத்த வடமாநில இ. போ. ச. முகாமையாளர் ஒழுங்கு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தச்சேவை பகல் வரை ஆறுதலாகவும் பின்பு கடுகதியாகவும் இருக்கும்.

சுமார் 2000 தொண்டர்களுக்கு அவ்வூரவர் அன்னதானம் கொடுப்பார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பரிசு

## ரூ. 225-00 --- 225-00

## சிறுகதை -- கவிதை போட்டி

முடிவு திகதி 12-2-1966

எழுத்தாளர்களுக்கும் கவிஞர்களுக்கும் 'ஈழநாடு' வாரமலர் அளிக்கும் சந்தர்ப்பம்.

### போட்டி விதிகள்

1. இரத்ததானத்தின் நற்பயனை எடுத்துக் கூறுவதாக சிறுகதை, கவிதையின் 'கரு' அமைந்திருக்க வேண்டும்.
2. சிறுகதை 'ஈழநாடு' பத்திரிகையின் ஒருபக்கத்துக்கு மேற்படாததாகவும் கவிதை 'ஈழநாடு' பத்திரிகையின் கால் பக்கத்துக்கு (ஒன்றேகால் கலம்) மேற்படாததாகவும் இருக்க வேண்டும்.
3. போட்டியில் பங்குபற்றுபவர்கள் புனைபெயரில் எழுதலாம். ஆனால் தங்கள் சொந்தப் பெயரையும் சரியான விலாசத்தையும் தெளிவாக எழுத வேண்டும்.
4. போட்டிக்குவரும் கதைகளையும் கவிதைகளையும் தகுதிவாய்ந்த எழுத்தாளர், கவிஞர்களைக் கொண்ட ஒரு குழு பரிசீலனை செய்து பரிசுக்குரியவைகளைத் தேர்ந்தெடுக்கும். எனினும் போட்டி சம்பந்தமான இறுதித் தீர்ப்பு வழங்கும் உரிமை 'ஈழநாடு' ஆசிரியருக்கே உண்டு.
5. 'ஈழநாடு' காரியாலயத்தில் வேலை செய்யும் ஊழியர்களும், அவர்களின் உறவினர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### பரிசு விபரம்


மிகச் சிறந்த சிறுகதையாகத் தெரிவு செய்யப்படும் சிறுகதைக்கு 100 ரூபாயும், மிகச் சிறந்த கவிதைக்கு 100 ரூபாய் பரிசும் வழங்கப்படும்.

இரண்டாவது சிறந்த கதைக்கும், கவிதைக்கும் தலா 75 ரூபாயும் மூன்றாவது சிறுகதை, கவிதைக்கு தலா 50 ரூபாயும் பரிசாக வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் இரத்ததான சங்கத்தினால் இப்போட்டி ஒழுங்கு செய்யப்படுகிறது.

போட்டி ஆரம்பம் 28-1-1966 -- முடிவு 12-2-1696

# வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு? இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கொழும்பு

புதன் 9-2-66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை, 344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15படத்திவிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 புல்லாங்குழலும் கிளாரினெட்டும், 9-30 பாட்டு, 10-00 நேயர் விருப்பம்.



ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
ஆலய மணி

தினசரி 4-15க்கு மட்டும்
குறாக்ஸ் அனேனிமஸ்
(ஆங்கிலம்)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
பானுமதி - ராஜன்
நடித்த
அன்னை

REGAL—JAFFNA
NOW SHOWING
Kirk Douglas
in
For Love or Money
(EastmanColor)

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடேர்ன் (பண்டாரவளை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்)
தீவொளி (நூரளை) கல்யாணி (நாவலப்பிட்டி) சந்தியா (கம்பளை)


பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே தேவர்
மற்றும் பலர் நடித்து
அனைவரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
எம். ஜி. ஆர். — சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்


கைப் பந்தாட்டம்

## குடத்தனைக்கு வெற்றி

உடுப்பிட்டி, செவ்.

குடத்தனை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில், 3—0 புள்ளிகளால் குடத்தனை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுக்கொண்டது. ஆரம்பத்தில் குடத்தனை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மிக உற்சாகத்துடன் விளையாடியது. இரண்டாவது ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக வீரர்கள் மிக விறுவிறுப்புடன் விளையாடியும் குடத்தனை ஐக்கிய விளையாட்டு வீரர்கள் மிக இலகுவில் வெற்றியீட்டினுர்கள்.

மூன்ருவது ஆட்டத்தில் குடத்தனை ஐக்கியவிளையாட்டுக்கழக காப்டன் திரு. வி. தணிகாசலம் உற்சாகத்துடன் விளையாடினுர். மூன்ருவது ஆட்டம் விறுவிறுப்பாக நடந்தது. இந்த ஆட்டத்திலும்குடத்தனை ஐக்கிய விளையாட்டு வீரர்கள் சென். அன்ரனிஸ்விளையாட்டு வீரர்களை மிக சுலபமாக தோற்கடித்தார்கள். மேற்படி போட்டிக்கு திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

# "காதலித்தது உண்மை; ஆனால் அவருடன் போகவிருப்பமில்லை"

## கோர்ட்டில் இளம் பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்.

'நான் அவரைக் காதலித்தது உண்மை. ஆனுல் நான் அவருடன் இப்போது போக விருப்பமில்லை' என்று பதினேழுவயதான குகலட்சுமி என்றஇளம்பெண் யாழ்ப்பாணம்மாஜிஸ்டிரேட் கோட்டில்நீதிபதி திரு ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் கூறினுர்

விண்ணப்பதாரரான மகேந்திரனுடன் செல்ல விரும்புகிறீரா அல்லது தாயாருடனும், சகோதரருடனும் மாமனுடனும் செல்ல விரும்புகிறீரா என நீதிபதி கேட்டபொழுதே குகலட்சுமி மேற்கண்டவாறு கூறினுர். குகலட்சுமிக்கு அருகில நின்ற தாயாரையும், சகோதரரையும், மாமனையும் அப்பால் செல்லும்படி கூறிவிட்டே நீதிபதி மேற்கண்டவாறு கேட்டார்.

விண்ணப்பதாரரான கொழும்புத்துறையைச்சேர்ந்த புறக்டர் எஸ். அமிர்தலிங்கம் மூலமாக முருகேசு மகேந்திரன், சுப்பிறீம் கோட்டிற்கு மகஜர் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, கொழும்பு சுப்பிறீம்கோர்ட் நீதியரசர் திரு. ஜி பி. ஏ சில்வா இவ்வழக்கை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடந்த மாதம் 30-ந் திகதி உத்தரவிட்டதைத்தொடர்ந்து, இங்கு விசாரணை ஆரம்பமானது.

விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும், வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். மெல்லிய நீலநிறச் சேலையும் அதற்கேற்ற பட்டுச்சட்டையும் அணிந்து, தாயாருடனும், சகோதரன், மாமனுருடனும், குகலட்சுமி கோட்டிற்கு வந்திருந்தார்.

பிரதிவாதிகளான அரியாலையைச் சேர்ந்த குகலட்சுமியின் தாயார் திருமதி வயித்திலிங்கம், சகோதரன் வி. கதிர்காமநாதன், மாமன் சதானந்தன் சந்திரபோஸ் சார்பில் புறக்டர் எஸ். சி. கதிரவேலு ஆஜரானுர். விண்ணப்பதாரரான முருகேசு மகேந்திரன் சார்பில் அட்வக்கேட் திரு. கே வி. எஸ். சண்முகநாதன் புறக்டர் எஸ் அமிர்தலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

நீதிபதி விசாரணையை மார்ச் மாதம் 26-ந் தேதி வரை ஒத்திவைத்தார்.

## கிராமசபைகளுக்கு...

(2ம்பக்கத்தொடர்ச்சி)

கள் துப்பாக்கியும் பிடிக்க வேண்டும். சில கிராமங்களில் கோவில், பள்ளிக்கூடங்களில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது சில காண்டன்களில் தொழிற் தகராறுகளைத் தீர்க்கும் பஞ்சாயத்துகளுக்குப் பெண்கள் தெரிவு செய்யப்படுகின்ருர்கள்.

சில காண்டன்களில் வாக்குரிமையைப் பயன்படுத்தாதவர்களுக்குத் தண்டனையும் விதிக்கப்படுன்றது. அங்கு தேர்தலில் வாக்குகள் அதிகமாகப் பதிவாகின்றன. சர்வஜன வாக்கெடுப்பில் யாரு தங்கள் இஷ்டப்படி, பயமின்றிவாக்களிக்கலாம். இந்தவுரிமை மறுக்கப்படும் யாரும் சமஷ்டி உயர்நீதி மன்றத்திற்கு புகார் செய்யலாம். தேர்தலில் ஒழுங்கீனம் நடந்தாலும், சமூக விஷயமாக இருந்தாலும் அதுபற்றிப் புகார் செய்வது யாருக்கும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது

(வளரும்)

## ஐயாறன்

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

இருந்தவருமான பீட்டர் சோமசுந்தரமவர்கள், புருனேயிலிருந்து நமக்கு எழுதியுள்ள கடிதத்தில், ''ஈழநாடு'' பத்திரிகையைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை என்றும், விமானத் தபாலில் தினசரி அதை அனுப்பிவைக்குமாறும், அதற்கான பணத்தை இங்குள்ள அவரது மனைவியாரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாமென்றும் எழுதியிருந்தார்கள். அவ்விதமே இப்போது விமான மூலம் அவருக்கு 'ஈழநாடு' பத்திரிகை பறந்து செல்லுகிறது.

'ஈழநாடு' நமது வாசகர்களின் உள்ளத்திலே எவ்வளவு தூரம் இடம் பெற்றுள்ளதென்பதற்கு இது ஓர் அத்தாட்சி.

ஃ ஃ ஃ

இவ்வளவு சீக்கிரத்தில் இப்பத்திரிகை மக்களது அன்பைப் பெற்றதற்கு என்ன காரணம் தெரியுமா? அன்னை தையல்நாயகி தேரிலே வந்து வாசலில் நின்று, இந்த ஸ்தாபனத்துக்கு அஸ்திபாரமிட்டு அருள்செய்தார் இலக்கண சுவாமிகள் எனப்படும் முத்துக்குமாரசாமி தம்பிரான் அவர்கள் செய்ததவமும், அருளாசியும் இதற்குப் பாதுகாப்பளித்துவருகின்றது.

இப்பத்திரிகைப் பணியை ஒரு தெய்வீகத்தொண்டாக நடத்த முயன்று வருகிறோம். இது வளர்ந்து வருவதெல்லாம் இறைவன் செயல். ''தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே''.

ஃ ஃ ஃ

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும், எண்ணில் நல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலைக் கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்

## ஜி. ஜி.யின் மறுப்பு

பம்பலப்பிட்டி, செவ்.

மொழிப் பிரச்னைபோன்ற தேசியப் பிரச்னைகளை திருப்திகரமாகவும் கௌரவமாகவும், நிரந்தரமாகவும் தீர்த்து, நாட்டில் தேசிய ஐக்கியத்தை நிலைநிறுத்த வேண்டுமானுல் அதற்கு ஒரேவழி வட்டமேசை மகாநாடுதான் என்பதை நான் எப்பொழுதும் கூறிவந்துள்ளேன். இந்த முடிவிலிருந்து நான் ஒருபோதும் மாறியது கிடையாது.

தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம். பி. யுமான திரு. ஜி ஜி பொன்னம்பலம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கடந்தமாதம் 26-ந் தேதி பாராளுமன்றத்தில் நான் பேசிய பேச்சை வெளியிட்ட சில பத்திரிகைகள் வாட்டமேசைமகாநாடுஎண்ணத்தை நான் மாற்றிவிட்டதாக தெரிவித்திருந்தன. பாராளுமன்றத்தில் 26-ந் தேதி நான் பேசியபேச்சு 'ஹான்சாட்'டில் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது. வட்டமேசை மகாநாடு பற்றித் தான் மனதை மாற்றியுள்ளதாக நான் ஒருபோதும் பேசவில்லை யென்பதை 'ஹான்சாட்' மூலம் அறியலாம் ஒரு எம். பி யின்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

அரியாலை பிரப்பன்குளம் மகாமாரி அம்மன் (நாச்சிமார்கோவில்) அர்ச்சகர் தேவை என்றதை 6-2-66 'ஈழநாட்'டில் பார்த்தேன். ஷை கோவிலில் எனக்கும் உரிமையிருப்பதால் விண்ணப்பகாரர்கள் என்னை 184, கண்டி வீதியில் கலந்து கொள்ளவேண்டுகிறேன் க. சபாரத்தினம். 1902

**தேவை**

சிறு பையன்கள் 12-16 வயது வைத்தியசாலைக்கு நேரில் வரவும். டாக்டர் வி. ரி. பர்ஞந்து, 11, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 1898

நாவற்குழி பல நோ. கூ. சங்கத்திற்கு 28-2-66 தொடக்கம் கடமையாற்ற ஒரு மனேச்சர் தேவை. தகமை க. பொ. த. அல்லது அதற்குச்சமமான பத்திரம். சம்பளம் ரூபா 90X140 5X10 பிணை:- ரொக்கம் ரூபா 1000/- ஆதனம் ரூ. 2000/- கூட்டுறவுப்பயிற்சி பெற்றவரும், வியாபார அனுபவமுள்ளவரும் விரும்பத்தக்கது. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்களுடன் 15-2-66 வரை மேற்படி காரியதரிசி, கைதடிக்கு விண்ணப்பிக்கவும். 1900

**கல்வி**

பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை / விஞ்ஞானம் / வர்த்தகம், ஜீ. சி. ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞானம், ஜீ. சி. ஈ. விஞ்ஞானம் ஆரம்ப வகுப்புகள் விடுதி வசதிகள் உண்டு. ஐக்கிய கலாசாலை நெல்லியடி கரவெட்டி/ 107 பருத்தித்துறை றேட், நல்லூர், யாழ்ப்பாணம். 1856

இலங்கையின் தரமுயர்ந்த தபால்மூலம் கல்வி ஜீ சி. ஈ. சாதாரணம்/உயர்தரம், ஜி. ஏ. கியூ. /பி. ஏ. 22 ஸ்கொலசிப்புகள் வழங்கப்படும். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி/ கரவெட்டி. 1881

வெற்றி உறுதியளிக்கப்படுகிறது. எங்கள் அஞ்சல் போதனுமுறைக் கல்வி சிறந்த பயிற்சி அளிக்கிறது. பி. ஏ. பொருளாதாரம், கலை, கைப்பணி பொருட்காட்சி பற்றிய விபரங்கள். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1882

உயர்தரக் கல்விதர ஊக்கத்துடன்உழைப்பது சென், போல்ஸ் கல்லூரி, கே கே. எஸ். வீதி, கொக்குவில். காலை, மாலை - ஆண் பெண் இருபாலாருக்கும் அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியர்களால் விஞ்ஞானம், கலை, வர்த்தகம், தமிழ் - ஆங்கில மொழிகள் மூலம் கற்பிக்கப்படுகின்றன ★ மாணவர்க்கு விடுதி வசதியுண்டு வகுப்புக்கள் 6-ம், 7-ம், 8-ம் வகுப்புகளும், ஜி. சி. ஈ. உயர், சாதாரண வகுப்புகளும், B. A., G. A. Q வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன. நேரில் விண்ணப்பிக்கவும். 1887

பீ. ஏ; ஜீ. ஏ. கியூ; ஜீ சி. ஈ உயர்தரம் கலையியல் ஒரு வருடப் பயிற்சி, சாதாரணம் கலை/விஞ்ஞானம்; வர்த்தக வகுப்பு தமிழ்/ ஆங்கிலம் சிங்களம்; ஜே எஸ் சி. ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. சித்திஉறுதி! உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்-யாழ்ப்பாணம் கிளை: (நெல்லியடி இன்டஸ்ரியல் வேக்ஸ் முன்பாக) வதிரி-கரவெட்டி. 1901

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜோன்சன்-தென்வியட்னும் தலைவர் பேச்சுவார்த்தை நீடிக்கிறது

ஹொனலுலு, பெப். 8 வியட்னும் பிரசினைபற்றி அமெரிக்க அதிபர் ஜோன்சன் தென் வியட்னும் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். நேற்று ஆரம்பமாகிய இரண்டு நாள் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இருநாட்டு உயர்தர அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ள இந்த பேச்சுவார்த்தை இரகசியமாக நடைபெறுகிறது.

இதற்கிடையில் அமெரிக்கா வியட்னுமில் படைபலத்தை அதிகரித்துள்ளது. இப்பொழுது வியட்னுமில் 200,000 க்கும் மேட்பட்ட அமெரிக்கத் துருப்புகள் கடமையாற்றி வருகின்றன. வடவியட்னும் மீதான குண்டு வீச்சும் அதிகரிக்கப் பட்டுள்ளதாம். அமெரிக்கா தென் வியட்னும், தென் கொரியா ஆகியவற்றின் துருப்புகள் ஒன்று சேர்ந்து பெரும் போருக்கு தயார் செய்வதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வியட்னும் பிரச்னை குறித்து ஐ. நாவில் பிரதிநிதிகள் தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

வியட்னும் பிரச்னையில் அமெரிக்காவின் கொள்கைக்கு ஆதரவு கொடுப்பதை பிரிட்டன் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற பிரேரணைக்கு இடதுசாரி எம் பி ஒருவர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்

## யாழ்ப்பாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் தங்கள் இருப்புச் சாமான்களையும், விற்பனையையும் குறைத்துக் காட்டியிருக்கிறார்கள் என்றும், லைசன்ஸ் இல்லாமல் நகை அடைவு பிடித்தும், மற்றும் பல வழிகளில் பணம் சேர்த்து பதுக்கி வைத்தும் இருப்போர்களைப் பற்றிய தகவல்களும் இலாகாவிடம் இருக்கின்றன. அதே சமயம் திடீர் சோதனைகள் மூலம் கணக்கில் காட்டாத லட்சக்கணக்கான பொருட்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன.

வருமானவரி மன்னிப்பின் கீழ், பதுக்கப்பட்ட செல்வத்தின் மூன்றிலொரு பங்கே அறவிடப்படும் என்றும், ஆனால் மன்னிப்புக் காலம் முடிந்தபின் கள்ளக் கணக்கு காட்டுவோர்மீதும், பதுக்குபவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிப்பு கூறுகிறது

திடீர் சோதனைகள், புலன் விசாரணைகள் ஆகியவற்றின் மூலம் கண்டுபிடிக்கப்படுவோர் மீது 80 சதவிகிதம் வரி அறவிடப்படுவதுடன், வரிக்கும் மேலதிகமாக அபராதத்துக்கும் ஆளாக நேரிடும் என்றும் மேலும் அது கூறுகிறது.

இதைப்பற்றி தகவல் பெறவிரும்புவோர், அல்லது பதுக்கல் பணம் அல்லது கணக்குப் பிழைகளை வெளியிட விரும்புவோர் உள்நாட்டு இறைவரி இலாகாவின் யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகத்து பிரதம வரி மதிப்பாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும் எனக் கோரப் பட்டிருக்கிறது. இம் மாதம் 17-ம் திகதி மன்னிப்பு திகதி காலாவதியாகும்.

நாடு முழுவதும் இதுவரை 6 கோடி ரூபாய் பதுக்கல் பணம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

## உணவு விநியோகம் பற்றி ஆலோசிப்பர்

பம்பலப்பிட்டி, செவ் உணவுவிநியோகம், உணவு உற்பத்தி சம்பந்தமாக அரசாங்க அதிபர்களின் மகாநாடொன்று இம் மாதம் 15-ம், 16 ம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர்கள் உணவுப்பொருட்களை கூ. மொ. விகளுக்கு கொடுத்து அவர்கள் மூலமாக மொத்தவியாபாரிகளுக்கு விநியோகிப்பது சம்பந்தமாக ஆலோசிப்பார்கள்.

கூ. மொ. வி. தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க, தங்கள் தங்கள் பகுதிக்கு மொத்த விற்பனவு ஏஜண்டுகளை தெரிவுசெய்வர். இவர்கள் சில்லறை வியாபாரிகளுக்கு இரண்டுவாரத்துக்கு ஒரு பொருட்களைக் கொடுப்பர்,

மகாநாட்டில் உணவுப் பொருட்களை ஒவ்வொருபகுதிக்கும் எப்படி விரைவாக அனுப்பலாம் என்பது பற்றி ஆலோசிப்பர்.

## தமிழ் பட்டதாரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்தின் கலைப் பிரிவிற்குரிய பரீட்சை முடிவுகள் இன்னும் இரு வாரங்களுக்குள் வெளிவரலாம் என்பதைத் தொடர்ந்து அதன் பின்பாகவே விண்ணப்பங்கள் அரசாங்கவர்த்தமானியில் கோரப்படும் எனவும் தெரியவருகிறது.

ஏறக்குறைய நூற்றைம்பது வெற்றிடங்கள் நிரப்பப் படலாமென அறியப்படுகிறது. இலங்கையின் சகல பகுதிகளிலுமுள்ள தமிழ்ப் பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் தத்தமது பாடசாலைகளில் தேவைப்படும் பட்டதாரிகளின் தொகையைக் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கும்படி வேலையற்ற தமிழ்ப் பட்டதாரிகளின் சங்கத்தைச் சேர்ந்த கொழும்புப் பிரிவுக் காரியதரிசி ஒரு பொது வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பல பாடசாலைகளில்வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருப்பது பற்றி கல்வி அமைச்சுக்கு அதன் தலைமையாசிரியர்கள் உண்மையானபுள்ளிவிபரத்தை அளிக்காதிருப்பது வருந்தத்தக்கதென்றும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

## திருத்தம்

யாழ்ப்பாணம், புதன் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான "ஈழநாடு" இரண்டாம்பக்கத்தில் "ஐக்கிய மாகாணவங்கி.." என்ற தலைப்பில்வெளியானசெய்தியில், யாழ்ப்பாணம் ஐக்கிய மாகாண வங்கிஊழியர்சங்க கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட, யாழ்ப்பாணம் ஐ மா. வ. ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகளை மூன்றுமாதத்துக்குள் நிறைவேற்றுவிடின் மக்கள் வங்கி, இந்த வங்கியை எடுப்பதற்காகிய நடவடிக்கைகளை தாய்ச்சங்கம் எடுக்கவேண்டுமென்ற' தீர்மானத்தில் மக்கள் வங்கி என்பதற்குப் பதிலாக வேறெந்த நிதி ஸ்தாபனம் என்று இருக்கவேண்டும்.

## அவசரகால நிலைமை நீடிப்பு

பம்பலப்பிட்டி, செவ். அவசரகால நிலைமை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது நாட்டில் பொது ஒழுங்கை நிலைநாட்டவும், பொ மக்களுக்குப் பாதுகாப்பளிக்கவும் அவசரகால நிலைமையை மேலும் ஒருமாதம் நீடிக்க வேண்டியுள்ளதாக நேற்று வெளியிடப்பட்ட அரசாங்க விசேஷ வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.இலக்கிய வட்டம்

யாழ்ப்பாணம், புதன் தமிழகத்தின் முதுபெரும் பத்திரிகைஆசிரியரும், தமிழ் இனப்பத்திரிகை உலக முன்னேடிகளில் ஒருவருமான திரு டி. எஸ். சொக்கலிங்கத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம்யாழ்ப்பாண இலக்கிய வட்டத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நகர மண்டபப் பொழுது போக்குச் சங்க அறையில் ரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இந்தியப்பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சனசமூக நிலையங்களுக்கு வருடந்தோறும் வழங்கப்படும் அரசாங்க மான்யத்தில் 25 சத வீதத்தை புத்தகங்களாக வாங்கிக்கொடுக்க வேண்டுமென்றும் அவையனைத்தும் இலங்கை எழுத்தாளர்களின் நூல்களாகவே இருக்கவேண்டுமென்றும் உள்ளூராட்சி ஆணையாளரிடம் கோரும் தீர்மானம் யாழ்ப்பாணத்தின் இலக்கிய வட்டத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கே. வி. நடராஜனின் 'யாழ்ப்பாணக்கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதியை நகர மண்டபத்தில் இம்மாதம் 14-ம்திகதிவெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## பாகிஸ்தானில் பூமியதிர்ச்சி

கராச்சி, பெப். 8 இங்கிருந்து 300மைல் தொலைவிலுள்ள பகாவல்பூர் என்னும் நகரில் நேற்றிரவு பூமியதிர்ச்சி ஏற்பட்டது. முன்னர் வந்த செய்திகளின் படி இதனால் எவ்வித சேதமோ உயிரிழப்போ இடம்பெறவில்லை என அறிவிக்கப்பட்டது. ஆனல் பின்னர் வந்த செய்திகளின் படி பல மண்குடிசைகள் இடிந்து விழுந்ததாகவும் மற்றும்வீடுகளுக்கு சிறு சிறு சேதங்கள் ஏற்பட்டதாகவும், பூமியதிர்ச்சி காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் 5 பெண்கள் புதையுண்டு இறந்து போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற வாரத்தில் ராவல் பிண்டி, குவேட்டா ஆகியநகரங்களிலும் இதேவிதமான பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

கிரிக்கெட்

## யாழ்ப்பாண கல்லூரிக்கு வெற்றி

சுழிபுரம், புதன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட்போட்டியில் யாழ்ப்பாணக்கல்லூரி 75ஓட்டங்களால் வெற்றியீட்டியது இப்போட்டியில் 'யாழ்ப்பாணக்கல்லூரி தனது முதலாவது [illegible] எல்லா விக்கட்டுக்களையும் இழந்தது. இரண்டாவது ஆட்டத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி 196 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களை இழந்தன. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முதலாவது ஆட்டத்தில் 103 ஓட்டங்களை எடுத்து எல்லா விக்கட்டுக்களையும் இழந்தது. இரண்டாவது ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரி 185 ஓட்டங்களை எடுத்து எல்லா விக்கட்டுக்களையும் இழந்தன.

## மாதர் சங்க வருடாந்த விழா

குரும்பசிட்டி, புதன் "பல வருடங்களாக அடிமைத்தலையிலிருந்த கீழைத் தேச நாடுகளில் இப்போது தான் சுதந்திர சூரியன் ஒளிக் கிரகங்கள் தெரிய ஆரம்பித்திருக்கின்றன. இந்த உதய வேளையில் முக்கியமாக பெண்கள் சோம்பி உறங்காமல் நாட்டுக்குச் செய்யவேண்டிய சேவையில் முன்னேற வேண்டும். ஒவ்வொரு நாடும் கிராமங்களின் சுபீட்சத்திலேதான் தங்கியுள்ளது. குரும்பசிட்டியில் உள்ள மாதர் சங்கம் சென்ற வருடகாலத்தில் கலை, சமயம், குடிசைக் கைத்தொழில், ஐக்கிய நாணயசங்கம் ஆகிய பல ஆக்க பூர்வமான வெற்றிகளை ஈட்டி யாழ்ப்பாணப் பகுதியிலேயே முன்மாதிரியான சங்கமாய் மிளிர்கிறது". என வலி வடக்குக் காரியாதிகாரிதிரு. டிமுருகேசம்பிள்ளை குரும்பசிட்டி மாதர் சங்க வருடாந்த விழாவில் தலைமைவகித்து பேசுபோது குறிப்பிட்டார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'பெரியபுரயணப் பெண்கள்' என்ற பொருளில் விரிவுரை நிகழ்த்தினர். பின்னர் குரும்பசிட்டி மாதர் சங்க ஆதரவில் நடைபெற்று வந்த நடன வகுப்பு மாணவிகளின் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

## கடத்தல்முயற்சி: இருவர்கைது

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணத்துக்கு அரிசி ஏற்றிவந்த 'பிரசிடெண்ட் பிரிட்டோரிஸ்' என்ற கப்பலிலிருந்து இருமூடை அரிசியை படகொன்றில் கடத்திச்செல்ல முயற்சித்ததாக சந்தேகத்தின் மீது சின்னப்பு மனுவல்பிள்ளை, ரி. பாக்கியநாதன் ஆகிய இருவரை குருநகர்ப் பொலிசார் நேற்று முன்தினம் இரவுகைதுசெய்தனர்.

குருநகர் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி எம். துரைசிங்கம் இது சம்பந்தமாக விசாரணை நடத்திவருகிறர். (ந. நி.)

## 'அமெரிக்க...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் கூறியதாவது:-

இலங்கை-அமெரிக்க நட்புறவுச் சங்கத்தின் முயற்சியிலேயே இந்த நிகழ்ச்சியைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு நமக்கு ஏற்பட்டது இந்தச்சங்கத்தினர் நமக்குப் பல விதத்தாலும் சேவையே செய்துவருகின்றனர். மூடப்படவிருந்த அமெரிக்கக் கலாச்சார நிலையத்துக்கு முற்றுப் புள்ளிவைக்காமல் தொடர்ந்து அதன் சேவையை நமக்கு அளித்துக் கொண்டிருப்பவர்கள் இலங்கை அமெரிக்க நட்புறவுச் சங்கத்தினரே.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இந்த இசைக் கோஷ்டியினரின் நிகழ்ச்சிகள் புதுமையானதாகவே இருக்கிறது. மனதைக்கவரக்கூடியவிதத்தில் இன்னிசை தந்த இவர்களை நாம் பாராட்டத்தான் வேண்டும்.'

## தேடுதல் முயற்சி பயனளிக்கவில்லை

புதுடில்லி, பெப். 8 நேற்று நண்பகல் காணமற்போன "இந்தியன் எயர் லைன்" விமானத்தைக் கண்டு பிடிக்க எடுத்துக் காள்ளப் பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. வானத்திலும் தரையிலும் நடத்திய கண்டுபிடிப்பு முயற்சிகள் ஒருவிதத்திலும் பத்திரிகை அச்சுக்குப் போகும்வரை பயனளிக்கவில்லை என அறிவிக்கப்பட்டது. காஷ்மீரில் வானிலை மோசமாகியுள்ளதே இதற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. தேடுதல் முயற்சியில் ஈடுபட்ட விமானப்படை விமானம் ஒன்று வானிலை சாத்தியமில்லாததால் அமிர்தசரஸில் தடைப்பட்டது. காணமற்போன விமானத்தில் காஷ்மீரைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் உட்பட 33 பேர் பிரயாணம் செய்தனர்.

## சங்கீத பூஷண பட்டதாரிகள் கூட்டம்

யாழ்ப்பாணம் புதன் யாழ்ப்பாண நாவலர் பாடசாலை மண்டபத்தில் கூடிய சங்கீத பூஷணப் பட்டதாரிகள் சங்க கூட்டத்தில் இசையாசிரியர்களின் சம்பள விஷயமாகவும், இசைத் துறையில் அவர்களது பொறுப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டது.

மேற்படி சங்கீதபூஷண பட்டதாரிகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், காங்கேசன்துறை எம். பி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ஆகியோரைப் பேட்டி காண்பதெனவும் இதன் பின் மந்திரியைப் பேட்டி காண்பதெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

## செயல்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்களைக் கொண்டு நடாத்தி, அந்தந்த ஆசிரியர் பயிற்றுவிக்கும் மாணவரின் கல்வித்தரத்தைக் கொண்டு ஆசிரியர்களின் செயல் திறனை அளவிட கல்வி இலாகா திட்டங்கள் வகுத்து வருகிறது. செயல்திறனில் உயர்ந்து விளங்குபவருக்கே சம்பள உயர்வு கிடைக்கும்!

## ஜி. ஜி. யின் மறுப்பு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்குப் பதிலளிக்கும் போது அச்சந்தர்ப்பத்தில் தெரிவித்த ஒன்றைக் கொண்டு எனது அடிப்படைக் கொள்கையை மாற்றிவிட்டதாகக் கூறுவது பொருத்தமற்றதாகும்.

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் உள்ள ஆஸ்டின் A-55 கார் விற்பனைக்குண்டு. 1 ஸ்ரீ 7600 தொடர் இலக்கம். விலை ரூ. 18250/- பார் வையிடவும். 105, பேங்ஷால் வீதி, கொழும்பு-11 டெலிபோன்: 7643. 1895

டாக்டர் ஒருவரால் பாவிக்கப்பட்ட 4 சிறி 6000 தொடர்பு எண்ணுள்ள A/55 கேம்பிரிட்ஜ் உடனடியாக விற்பனைக்குண்டு. நல்ல நிலையில் உள்ளது. காலை 9 மணி தொடங்கி மாலை 4 மணி வரை யாழ்ப்பாண வாடிவீட்டுக்கு எதிரில் பார்வையிடலாம். 1904

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org